செப்டம்பர் 3

## புனித பெரிய கிரகோரியார் (540 – 604)

இவரது கல்வியறிவைக் கண்ட ஜஸ்டின் என்னும் பேரரசர் இவரை உரோமை நகரின் பிரதம நீதிபதி ஆக்கினார். இவருடைய தந்தை இறந்த பின் இவர் சிசிலி நாட்டில் ஆறு சந்நியாச மடங்களை அமைத்தார். உரோமையில் உள்ள தமது வீட்டை ஏழாவது மடமாகக் கட்டினார். இவரும் அங்கு துறவியானார். பாப்பானவர் இறந்ததும், குருக்களும் மக்களும் ஏக மனதாக இவரை பாப்புவாகத் தேர்ந்தெடுத்தார்கள். இவர் திருச்சபைக்கும், உலகிற்கும் பெருத்த நன்மைகளைச் செய்திருக்கிறார். ஆதலால் இவருக்கு பெரிய கிரகோரியார் என்னும் பட்டம் கிடைத்தது. இவர் பாப்பானவர் ஆனதும் ஏழுமுறை மக்களைத் திரட்டி தவ ஊர்வலமாக அவர்களை அழைத்துச் சென்று கடவுளது இரக்கத்தையும் பொறுத்தலையும் பெற்றுக் கொடுத்தார். எங்கும் பரவியிருந்த கொடிய கொள்ளை நோய் ஒன்று அகலும்படி இவர் மக்களோடு சேர்ந்து கடவுளை மன்றாடினார். அப்பொழுது மிக்கேல் அதிதூதர் வானத்தில் தோன்றினார். அவர் வாளை உறையில் போடுவதை மக்கள் கண்டனர். துறவிகள் விரத்தராக வாழ இவர் வற்புறுத்தினார். பணம் கொடுத்து பதவி வாங்குவதையும், தப்பறையான கொள்கைகளையும், அநீதியையும் ஒழித்துக் கட்டினார். இத்தாலியா, ஆப்பிரிக்கா, சிசிலி என்னும் நாடுகளில் திருச்சபையின் சொத்துக்கள் ஏழைகளுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்று இவர் வற்புறுத்தினார். ஏழைகள் மீது இவர் எல்லையற்ற இரக்கம் உள்ளவர். அண்டை நாடுகளை எதிரிகள் தாக்கியமையால் மக்கள் பயந்து உரோமைக்கு ஓடி வந்தார்கள். பட்டினியாகக் கிடந்த மக்களுக்கு இவர் உணவளித்தார். “பாப்பானவர் திருச்சபையின் காரியங்களில் அதிகாரம் படைத்தவர் என்றாலும் அவ்விசுவாசத்தைக் காப்பாற்ற உலக அரசர்களின் உதவி அவசியம்” என்று இவர் கூறினார். இவர் கடின உழைப்பாளி. நூல்கள் பல எழுதி நன்மை ஏராளமாகச் செய்தார்.

**சிந்தனை:**

திருச்சபையின் தலைவர்கள் திருச்சபைக்கு மாத்திரமல்ல, அகில உலகுக்குமே நன்மை செய்வதில் விழிப்பாயிருக்க வேண்டும்.

**செபம்:**

ஆண்டவரே, திருச்சபைக்கு ஏற்ற தலைவர்களைத் தாரும்.